DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 206/2014 PW : 2

Name : தனசேகர் Age –

S/o : சந்திரன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 25.11.2025.

**5 முதல் 12, 24 முதல் 26 வரைலியான பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) வேதப்பகிளாரி என் தாத்தாவின் அப்பா ஆவார். வேதப்பகிளாரிக்கு 3 செங்கல்வராயன், ஜெயராமன், விராராகவன் பெண் வாரிசுகள் யாரும் இல்லை. செங்கல்வராயன் தற்போது உயிருடன் இல்லை, அவருக்கு 3 மகன்கள், 2 மகள்கள். சந்திரன், வேனு, நீலகண்டன், ராஜாம்மாள் என்கிற கோவிந்தம்மாள் மற்றும் சரோஜம்மாள், சந்திரன் தற்போது உயிருடன் இல்லை. அவரின் மனைவி பெயர் கோவிந்தம்மாள். சந்திரன் மற்றும் கோவிந்தம்மாளுக்கு நான் தான் ஒரே வாரிசு. வேனு காலமாகிவிட்டார் அவரின் வாரிசுகள் விஜய மற்றும் ரமேஷ் வாரிசுதாரர்கள். நீலகண்டன் உயிருடன் இருக்கிறார். சரோஜம்மாள் இறந்துவிட்டார். அவருக்கு வாரிசு இல்லை. ராஜாம்மாள் உயிருடன் இல்லை. அவரின் கணவர் கங்கபிள்ளை. அவரும் உயிருடன் இல்லை. அவருடைய வாரிசுகள் பக்கிரி, சரஸ்வதி, காஞ்சனா, விஜயா மற்றும் செல்வராஜ் ஆகும். பக்கிரி தற்போது உயிருடன் இல்லை. பக்கிரியின் மனைவி பெயர் விஜயா. அவர்களுடைய வாரிசுகள் 3 பெண் பிள்ளைகள் அவர்களின் பெயர் ஞாபகமில்லை. சரஸ்வரி உயிருடன் இல்லை. அவரின் கணவர் உயிருடன் இல்லை. அவருடைய வாரிசுதாரர் எனக்கு தெரியாது. பெயரும் தெரியாது. காஞ்சனாவும் தற்போது உயிருடன் இல்லை. அவருடைய கணவர் பெருமாளும் இறந்துவிட்டார். அவர்களுடைய வாரிசுதாரர்கள் 5 பேர் உள்ளார்கள். இறந்த

சரஸ்வரின் வாரிசுதாரர்களை இந்த வழககில் சேர்த்துள்ளோம். நான் அவரின் பெயர் ஞாபகமில்லை. வீராராகவன் தற்போது உயிருடன் இல்லை. அவரின் மனைவி பெயர் நாகரத்தினம். அவருக்கு முத்து, சுப்பிரமணி, கஜேந்திரன், ரமேஷ், தேவேந்திரன் ஆகும். தேவேந்திரன் இறந்துவிட்டார். அவரின் மனைவி பெயர் நிர்மலா. அவர்களுக்கு வாரிசுதாரர்கள் இல்லை. ஜெயராமன் சிறுவயதிலேயே காலமானதாக கேள்விப்பட்டேன்.

2) என் தாத்தா செங்கல்வராயன் சொத்தை மீட்டு எடுக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து 28 சென்ட் நிலம் ஆகும். செங்கல்வராயனுக்கு தாவா சொத்து அவரின் அப்பா மூலமாக வந்தது. 28 சென்ட் நிலமும் அவருக்கு மட்டும் தான் சொந்தமாகும். அந்த சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் சர்வே எண்.129/3. இடையில் UDR No மாறியுள்ளதால் அதன் சர்வே எண்.174 மாறியுள்ளது. 174 சர்வே எண். எத்தனை உட்பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் வருவாய் ஆவணங்கள் வாங்கிய பின்பு 174 சர்வே எண் எத்தனை உட்பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளது என்பதை நான் பார்க்கவில்லை. 174 சர்வே எண் தற்போது 174/12 முதல் 174/19 வரை மாற்றப்பட்டுள்ளதாக வா.சா.1 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது நானும் உடன் இருந்தேன். இதற்குண்டான வரைப்படத்தை தாவா தாக்கல் செய்யும் போது கொடுத்துள்ளேன். அந்த வரைப்டத்தின் மூலமாக உட்ப்பிரிவுகளாக மாற்றுள்ளதை நான் தெரிந்து கொண்டேன். 174/12–ல் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 174/12–ல் கோவிந்தம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். முத்து கிருஷ்ணன் என்பவர் எங்களை வகையறா சேர்ந்தவர் கிடையாது. சந்தம்மாள் கிரையம் வாங்கி நிலத்தின் சர்வே எண்.174/17 என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பட்டாபிராம் என்பவருக்கு 04.01.1953ம் தேதியன்று கூர் சீட்டு மூலமாக 3 சென்ட் நிலம்

ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த சொததை சுப்பிரமணி கிரையம் வாங்கியுள்ளார் அதை பற்றி எனக்கு தெரியாது.

3) 174/15 சுப்பிரமணியின் பெயர் பட்டா ஆகியுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.174/14 யோகநாதன் பெயரில் பட்டா ஆகியுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. வேதப்பகிளாரி உயிரடன் இருக்கும் போது 3 சென்ட் நிலம் மாணிக்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. அவரிடமிருந்து ராஜவேலு முதலியார் 15.02.1990ம் தேதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்திற்கு 174/18 என்று அவர் பெயர் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வேதப்பகிளாரி ஸ்ரீனிவாசமுதலியாருக்கு 12.01.1989ம் தேதி 3 சென்ட் நிலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன விபரங்கள் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அவர்களுடைய பதிலுரையில் குறிப்பிட்டுள்ளது பற்றி என் வழக்கிஞர் மூலம் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்திற்கு வில்லங்க சான்று போட்டு பார்த்தேன். அதில் கோவிந்தம்மாள் பெயரில் மட்டும் தான் 5 சென்ட் நிலம் உள்ளதாக இருந்தது. அந்த வில்லங்க சான்று நான் வழக்கிஞரிடம் கொடுத்துள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழகககு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் எந்த வித வில்லங்க சான்று பார்க்காமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழகககு தாக்கல் செய்வதற்கு முன்பு நானும், வா.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நிலம் அபகரித்த நபர்கள் மீது அந்த புகாரை கொடுத்துள்ளோம். யோகநாதன், சாந்தா, ராமசந்திரன், ரூக்கு, சுப்பிரமணி, ஸ்ரீனிவாசமுதலியார், ராஜவேலுமுதலியார், வெங்கடேசன், கோவிந்தம்மாள் மற்றும் பலரும் மீது புகார் கொடுத்துள்ளேன். ஸ்ரீனிவாசமுதலியார், ராஜவேலுமுதலியார் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது அவரின் வழக்கிஞருக்கு தான்

தெரியும்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.25 15:55:51 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.